மாத்தளை மாநகர சபை
மாத்தளை மாவட்டம்
-----------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றானது 2019 மார்ச் மாதம் 29 ஆம் திகதி முன்வைக்கப்பட்டதுடன் அந் நிதிக்கூற்று தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே மாதம் 31 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே மாதம் 31 ஆம் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாத்தளை மாநகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முற்பணம் ரூபா 108,181 கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது. | முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 108,181 பணத்தினை ஒப்பீடு செய்து சரிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தனியார் நிறுவனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 323,755 பணமானது பரீட்சை நிலுவையில் . கிடைக்க வேண்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது |
| (ஆ) | நிதியாண்டிற்கான ரூபா 232,000 பெறுமதியுடைய முத்திரைக் கட்டணம் வருமானக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | முத்திரைக் கட்டணமானது கணக்குகளில் ஒப்பிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல். | 2018 ஏப்ரல் மாதத்திற்கான முத்திரைக் கட்டணம் ரூபா 232,000 இற்கான அட்டவணை பரிசோதனை செய்யப்பட்ட போதிலும் இது வரை இச் சபைக்கு கிடைக்கப் பெறவில்லை. |
| (இ) | நிதியாண்டிற்கான செலுத்த வேண்டிய ஓய்வூதிச் சம்பளப் பணம் ரூபா 570,167 கணக்குகளில் அதிகமாகக் காட்டப்பட்டு இருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் | ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நீண்ட காலத்திலிருந்து ஓய்வூதியச் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 15,155,076 தொகையானது ரூபா 14,618,675 எனக் குறிப்பிடப்பட்டு ரூபா 536,401 வினால் கடன் கொடுத்தோர் குறைவாக காட்டி இருந்தது. | சரியான பெறுமதியை பரீட்சித்து சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | நர்ட் குறிப்புக்களைப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | செலுத்தும் நிலையில் உள்ள ரூபா 5,300,000 பெறுமதியுடைய 3 வாகனங்கள் கணக்கில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சொத்து பற்றிய ஏடுகளை பொருத்தி இங்கு கூறப்பட்டுள்ள ஏதேனும் வாகனம் உள்ளடக்கப்படாவிடின் அதனை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஊ) | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 2,307,001 பெறுமதியுடைய 13 வாகனங்கள் பௌதீக ரீதியாக காணப்படவில்லை. | பௌதீக ரீதியாக காணப்படாத சொத்துக்களைத் தேடிப் பார்த்து கணக்குகளை பொருத்தல் மற்றும் சரியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | புத்தகங்களில் குறிபபிடப்பட்ட பெறுமதிகளின் பிரகாரம் கணக்குகள் காட்டப்பட்டுள்ளன. |
| (எ) | கொடுவே கெதர வடக்கு நகர எல்லையில் சிறிய பாலத்தின் அருகில் உள்ள பாதைக்கு கொங்கிறீட் இடும் கைத்தொழில் ஒப்பந்தம் செய்யப்பட்ட பணம் ரூபா 263,000 பணமானது ரூபா 26,300 என கடன் கொடுநர் கணக்கின் கீழ் குறிப்பிடப்பட்டு இருந்தது. | நிகழ்ந்துள்ள கணக்கீட்டு வழுவினை நாளேட்டு குறிப்புக்கள் ஊடாக பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 263,000 பணமானது தவறுதலாக கணக்கில் ரூபா 26,300 உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனை பேரேட்டுக் கணக்குகள் ஊடாக சரி செய்யப்படும். |

### 1.3.2 இணங்காத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 162,848,650 தொகையானது கணக்கீட்டு விடயங்கள் 9 இற்கானது மற்றும் அதற்கான ஆவணங்கள் மற்றும் | தொகைகளில் காணப்படுகின்ற வேறுபாடுகளை பொருத்தி கணக்குகளை சரிசெய்ய | பயன்படுத்தப்பட்ட ஆவணத்தில் தொகை குறைவடைவதற்கு காரணமான நிகரத் தொகைக்கு இடையில் பெறுவனவு கொடுப்பனவு |

| | | |
|---|---|---|
| அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள தொகை ரூபா 180,646,992 இற்கும் இடையில் ரூபா 22,981,812 வித்தியாசம் இருந்தன. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | மற்றும் மாதாந்த தவணைக் கட்டணப் பெறுவனவு என்பனவற்றை பொருத்தி இறுதிக் கணக்கில் தொகை குறிப்பிடப்படாமை ஆகும். தேடி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| 3 வருடங்களுக்கு அதிகமான காலத்தினை கடந்த கிடைக்க வேண்டிய 8 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 4,876,065 ஆகும். | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் படி படிமுறைகளை செயற்படுத்தல் மற்றும் பெற வேண்டிய பணத்தினை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | மிகுதி வருமானங்களை வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் கட்டணங்கள் தவறவிடப்பட்டமையால் இவ்வாறான நிலைமை உருவாகியுள்ளது. |
| **(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| 3 வருடங்களுக்கு அதிகமான காலத்தினை கடந்த கடன் கொடுத்தோர் கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 72,953,228 ஆகும். | கடன் கொடுத்தோர் கணக்குகளை சரிசெய்ய நடவடிக்கை எடுத்தல். | எதிர்காலத்தில் கடன் கொடுத்தோர் கணக்குகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.3.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை

**தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 7 கணக்கு விடயங்கள் தொடர்பிலான மொத்தம் ரூபா 13,690,623 இற்கான சான்றுகள் முன்வைக்கப்படாத காரணத்தினால் | தொடர்ந்தும் எதிர்வரும் மிகுதிகள் மற்றும் ஏனைய மிகுதிகள் என்பனவற்றை | முன்னைய காலங்களில் உருவான தொடர்ந்தும் இருந்து வருகின்ற மிகுதிகள் 2018 திசெம்பர் மாதம் தீர்க்கப்பட முடியவில்லை |

| | | | |
|---|---|---|---|
| கணக்காய்வில் அவை பற்றி திருப்திகரமான குறிப்பிட முடியவில்லை. | தேடிப் பார்த்து சாட்சிகளை சேகரித்து முன்வைக்க வேண்டும். | என்பதுடன் அந்த ஒவ்வொரு மிகுதியும் வெவ்வேறாக விடயங்களை ஆராய்ந்து பார்த்து சரிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை களை எடுப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1893 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க மாடுகள் சட்டம் பிரிவு 5,6 மற்றும் 7 | சபை பகுதியில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக மூன்று தனியார் ………………….. தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதி எதுவும் பெறப்படவில்லை. | சட்டத்தின் நடபடிமுறைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நகர சபைக்கு ஒரு கிடங்கு இல்லாததால், நகர சபைக்கு அப்பகுதியின் மற்றும் அப் பிரதேசத்திற்கு வெளியே இறைச்சி தேவைகளை பூர்த்தி செய்வதற்கு நகர சபைக்கு வேறு வழிகள் இல்லாமையால் மாடுகள் அறுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1989 ஜனவரி 20 ஆம் திகதிய இல 541/17 உடைய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நிறைவேற்றப்பட்ட உப விதிப்பு பகுதி III – பிரிவு 15 | மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 1,020,272,000 உடைய நிலங்கள் மற்றும் 38 கட்டிடங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத நிலங்கள் என்பன நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. | கணக்கெடுக்கப்பட்ட மற்றும் மதிப்பிடப்பட்ட நிலம் மற்றும் கட்டிடங்கள் நிலையான சொத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும். | தற்போது, ஒரு நிரந்தர சொத்து கணக்கெடுப்பு சபை நியமிக்கப்பட்டு, மா சபைக்கு சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஒரு தற்காலிக மதிப்பீடு செய்யப்பட்டு இறுதிக் கணக்கிற்கு சேர்க்கப்பட்டுள்ளது. |
| (ඇ) | இலங்கை சனநாயக் சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 104 மற்றும் 105 | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற வாகன விபத்து 3 தொடர்பில் விசாரணை நிறைவுற்று இருக்கவில்லை. | குறிப்பிட்ட விசாரணைகளை நிறைவுறுத்தி சரியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | KH - 4277 இலக்கமுடைய வாகனத்தின் புலனாய்வு அறிக்கை இது வரை கிடைக்கப் பெறவில்லை என்பதுடன் மற்றைய விபத்துக்கள் பற்றிய அடிப்படை விசாரணை உள்ளக கணக்காய்வுப் பிரிவு மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 99,916,360 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 63,175,930 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) வீதவரி மற்றும் வரி | 36,772,000 | 36,735,292 | 25,247,284 | 24,248,572 | 36,150,000 | 36,221,114 | 24,756,470 | 23,836,699 |
| (ii) வாடகை | 18,855,000 | 18,023,309 | 15,537,642 | 3,803,085 | 18,671,000 | 19,110,584 | 16,528,021 | 4,167,134 |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 8,553,000 | 11,216,012 | 10,993,012 | 223,000 | 8,033,000 | 10,647,215 | 10,089,290 | 14,000 |
| (iv) ஏனைய வருமானம் | 60,583,000 | 73,434,939 | 48,917,591 | 31,711,788 | 45,483,600 | 60,732,943 | 15,311,825 | 52,993,783 |
| மொத்தம் | 124,763,000 | 139,409,552 | 100,695,529 | 59,986,445 | 108,337,600 | 126,711,856 | 66,685,606 | 81,011,616 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்நோக்குச் சந்தை கட்டிடத் தொகுதியின் கடைகளின் குத்தகைதாரர்கள் 14 பேரிடமிருந்து 2014 ஆம் ஆண்டு இறுதி ஆகுகையில் அறவிடப்பட வேண்டி இருந்த பணம் மற்றும் அத் தொகைக்கான 10% தாமதக் கட்டணமும் உள்ளடங்கலாக ரூபா 23,425,994 அறவிடப்படவில்லை. | அறவிடப்பட வேண்டிய பணம் மற்றும் தாமதக் கட்டணத்தை அறவிட வேண்டும். | சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மா நகர சபையினால் நடாத்தப்படும் நீர் வழங்கல் கட்டமைப்பானது 2001 ஆம் ஆண்டில் தேசிய நீர் வளங்கள் சபைக்கு ஒதுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அறவிட வேண்டி இருந்த ரூபா 4,802,812 செலுத்த வேண்டிய நீர்க் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | குறிப்பிட்ட தொகைகளை அறவிட வேண்டும். | பதிவேடுகளில் இந்த அறவிடப்பட வேண்டிய தொகைகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் கடிதங்கள் பரிமாறப்பட்டு குறித்த நடவடிக்கைகளை நிவர்த்தி செய்ய முற்பட்ட போதிலும் நீர் வளங்கள் அதிகார சபையின் செலுத்த வேண்டிய தொகை இது வரைக்கும் தீர்க்கப்படவில்லை என்பதுடன் எதிர்காலத்தில் அதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 வீதவரி வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஜனவரி 01 ஆம் திகதி ரூபா 23,836,699 இல் ரூபா 10,969,758 மாத்திரமே அறவிடப்பட்டு இருந்தது. | மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் நடைமுறைகளுக்கு அமைவாக வருமானத்தினை அறவிட வேண்டும். | வரிப் பணம் அறவிடல் மற்றும் பட்டியலிடலானது மார்ச் மாதத்தில் மேற்கொள்ளப் படுவதுடன் அதில் நிலையான பற்றாக்குறை காணப்படுகிறது. குறிப்பிட்ட பிரிவுகளுக்கு பொறுப்பான வருமான பரிசோதகர் அதிகாரிகளால் சொத்துக்களை சுவீகரிப்பதற்கான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. சொத்துக்களை சுவீகரிப் பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 15,000 இற்கும் அதிகமான 129 வரி அலகுகளில் இருந்து ரூபா 3,739,860 அறவிடப்பட வேண்டி இருந்ததுடன், அவர்களின் நிலுவைக் கால வீச்சு 4 தொடக்கம் 59 வரை இருந்தது. | மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் நடபடிமுறைகளுக்கு அமைவாக வருமானத்தினை அறவிட வேண்டும். | மிகுதி வரிப் பணம் செலுத்த வேண்டியவர்களை உற்சாகப்படுத்தி அறவிட வேண்டிய கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் வருமான பரிசோதகர் அலுவலர்கள் இருவரின் (02) பற்றாக்குறை காரணமாக அப் பிரிவுகளையும் உள்ளடக்கி தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (இ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு 4 காலாண்டுகளை மிகைத்த | மாகாண சபை ஆணையாளரின் 2015/08 | பாரியளவில் அறவிட வேண்டிய பணத் தொகையினைக் கொண்ட நிறுவனங்களுக்கு |

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | செலுத்த வேண்டியுள்ள 26 அரச நிறுவனங்களில் இருந்து ரூபா 2,228,256 வரிப் பணம் அறவிடப்பட வேண்டும். | சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுத்து வரிப் பணத்தினை அறவிட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் முதல் மாதங்களினுள் அவற்றுக்கான காலப் பகுப்பாய்வு அறிக்கையை தயாரித்து அனுப்பி இருப்பதுடன், அவை மற்றும் ஏனைய கட்டணங்களை செலுத்தாத நிறுவனங்களுக்கு 2015/8 சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.4 வாடகை**

------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 3 வருடங்களுக்கு மேலதிகமாக இருந்து வரும் ரூபா 453,596 ஆன அறவிடப்பட வேண்டிய கூலி தொடர்பில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்து கூலியினை அறவிட்டுக் கொள்ளல் மற்றும் சரியான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | கூலி செலுத்தாத இடங்களை அடையாளங் கண்டு அவற்றில் காணப்படுகின்ற சிக்கல்களை நிவர்த்தி செய்து அவற்றை ஒப்பந்தம் செய்தல் மற்றும் நாளாந்த கூலி அடிப்படையில் வழங்கல் தொடர்பில் சபையின் தீர்மானத்திற்கு இணங்க எதிர்பாலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஆ) | 2007 ஆம் ஆண்டில் இருந்து 04 நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 307,281 மலசல கூட குத்தகைப் பணம் வசூலிக்கப்படவில்லை. | கூலியினை அறவிட சரியான நடவடிக்கைகளை எடுப்பதுடன் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படல் வேண்டும். | மலசல கூட குத்தகைப் பண மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதுடன் செலுத்தாத கூலி தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டிற்கான மாதாந்த வாடி வீட்டுக் கூலி மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட தொகையின் அடிப்படையில் வரி உள்ளடங்கலாக ரூபா 1,534,752 பணம் செலுத்த வேண்டி இருந்தது. | கூலியினை அறவிட சரியான நடவடிக்கைகளை எடுப்பதுடன் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படல் வேண்டும். | சபையின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த வாடி வீடானது மாநகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதுடன் சபைக்கு கிடைக்க வேண்டிய வாடி வீட்டு கூலி தொடர்ந்தும் மீதியாக உள்ளது. |
| (ஈ) | கொகாகோலா சாவடி மற்றும் லொத்தர் சாவடிகளில் இருந்து ரூபா 76,542 கூலி அறவிடப்பட்டு இருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னர் சரியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி அன்று நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 384,500 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 27,225,700 அறவிடப்பட வேண்டி இருந்தது. | மீதிகளை அறவிட வேண்டும். | தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன மாகாண சபையினால் ஆகும். ஆகவே அக் கட்டணங்கள் நிலையாக பல மாத காலங்கள் மீதியாகவே காணப்படுகின்றன. அவற்றை நிவர்த்தி செய்ய நாம் நடவடிக்கை எடுக்கப்படும். |

**2.2.6 மிகை அறவீடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் படிமுறைகளுக்கு அமைவாக பொறுப்புடைய நபர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட மேலதிக கட்டணத்தின் படி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 77,770 பணம் அறவிடப்பட வேண்டி இருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் மேலதிக கட்டணத்தை செலுத்தாவிடின் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெளிநாட்டு சுற்றுலா தொடர்பிலான மேலதிக கட்டணம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். இது வரை அறவிடப்படாமையால் கெந்தகொல்ல குறுக்கு வீதிக்கான மேலதிக கட்டணம் தொடர்பில் அது தொடர்புடைய மூன்று உத்தியோகத்தர்களால் மேன்முறையீடு முன்வைக்கப்பட்டுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட நலன்களை** (out put) **பெற்றுக்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை நிதியம் மற்றும் வெவ்வேறுபட்ட மானியங்களின் கீழ் ரூபா 4,179,176 செலவு செய்து 3 வருடங்களாக நிர்மாணிக்கப்பட்டு கொண்டு இருக்கின்ற சிகிச்சை நிலையங்கள் இரண்டின் வேலை நிறைவு செய்யப்பட்டு இருக்கவில்லை. | நிர்மாணப் பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு பாவனைக்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |

**(ஆ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் சபை நிதியத்தின் கீழ் ரூபா 691,611 மானியம் வழங்கப்பட்டு இருந்த 3 கைத்தொழில்களின் பணி இடை நிறுத்தப்பட்டு இருந்தது. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |

**(இ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | மாதந்தோறும் சேகரிக்கப்பட்ட இருபது மெட்ரிக் டொன் குப்பை வாரியபொல வத்த என்ற தனியார் நிலத்தில் முறையற்ற விதத்தில் குவிக்கப்பட்டது. | கொடுக்கப்பட்ட பதில்களைக கவனத்திற் கொண்டு நடவடிக்கை எடுத்தல் மற்றும் முறையாக கண்காணிக்க வேண்டும். | ஆற்றங்கரையில் இருந்து சுமார் 150 அடி தூரத்தில் குப்பைகள் இடப்படுகின்றதுடன் தற்போது அக் குப்பைகள் மெலிதாக்கப்பட்டும் உள்ளது.குப்பைகள் சேர்ந்த அசுத்த நீர் ஆற்றில் கலப்பதில் இருந்து தடுப்பதற்கு ஆற்றங்கரை அருகில் குழி ஒன்றினைத் தோண்டி அது அடித்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | விஹாரகமவத்த பிரதேசத்தில் 5 ஏக்கர் உடைய நிலமொன்று 2010 ஆம் ஆண்டில் ரூபா 2,000,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டு அதன் கழிவகற்றல் முறைமை பற்றிய அடிப்படை சாத்தியக் கூறு கட்டமைப்பு மற்றும் திட்டமிடலுக்காக ரூ. 400,000 செலவளிக்கப்பட்ட போதிலும் கழிவினை அகற்றுவதற்கு அந்த நிலம் பயன்படுத்தப்படவில்லை. | தேவைப்பாடு முறையாக நிறைவேற்றப்பட வேண்டும் | ஆராய்ந்து பார்த்து எதிர்காலத்தில் பதில் வழங்குவதாக குறிப்பிடுகின்றேன். |

**(ஈ) சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2000 ஆம் ஆண்டு 53 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 47 அம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் நடபடிமுறைகளுக்கு அமைவாக சபையின் கழிவு நீர் சுத்திகரிப்பு முறைக்கு சுற்றுச் சூழல் அனுமதிப் பத்திரம் பெறப்படவில்லை. | சுற்றுச் சூழல் அனுமதிப் பத்திரம் விரைவாக பெறப்படல் வேண்டும். | சுற்றுச் சூழல் அனுமதிப் பத்திரம் பெறுவதற்குத் தேவையான அனுமதிப் பத்திரம் மற்றும் ஆவணங்களை மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபோன அபிவிருத்தி இலக்குகள் தொடர்பிலான 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபையானது சரியான விதத்தில் அறிவுறுத்தப்பட்டு இன்மையால் நீண்ட காலத் திட்டங்கள் எதுவும் திட்டமிடப்பட்டு இருக்கவில்லை. | நீண்ட காலத் திட்டங்கள் திட்டமிடப்பட வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சூப்பர் மார்க்கெட்டில் 05 மீன் கடைகளும், கொங்காவெல சந்தை வளாகத்தில் ஒரு மீன் கடையும் 2004 இல் ஒப்பந்தம் செய்யப்பட்டன, ஆனால் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டு இறுதிக்குள் வாடகை திருத்தப்பட்டு புதிய ஒப்பந்தங்கள் எதுவும் எட்டப்படவில்லை. | கடைக் கூலி திருத்தப்பட்டு ஒப்பந்தங்களில் ஈடுபட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |
| (ஆ) | 2008 ஆம் ஆண்டில் இருந்து மூடப்பட்டுள்ள இலங்கை மீன்பிடிக் கைத்தொழில் கூட்டுத்தாபனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டு இருந்த இல 33 கடை தொடர்பில் அறவிடப்பட வேண்டிய இருந்த ரூபா 55,318 பணம் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிட வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |
| (இ) | சபையின் அதிகார பிரதேசத்தினுள் நடாத்திக் கொண்டிருந்த 53 வியாபாரங்களின் வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம், 80 வியாபாரங்களின் கைத்தொழில் வரி மற்றும் 15 வியாபாரங்களின் வியாபார வரி என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம், கைத்தொழில் வரி மற்றும் வியாபார வரி என்பவற்றை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |
| (ஈ) | சபையின் அதிகார பிரதேசத்தினுள் நடாத்திக் கொண்டிருக்கும் 9 மீன் கடைகளுக்கான சுகாதார பரிந்துரை இன்மையால் வியாபார அனுமதிப் பத்திரம் இல்லாது நடாத்தப்படுகின்றது. | தேவையான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மத்திய மாகாண பிரதான செயலாளரின் 2018 ஜுலை 25 ஆம் திகதிய CPC/CS/2/3/C/4/02 கடிதத்தின் அடிப்படையில் 3 மாத காலத்திற்கு மாத்திரம் ஒப்பந்த அடிப்படையில் சாரதி ஒருவரை வேலைக்கு அமர்த்துவதற்கு | 2018 ஜுலை 25 ஆம் திகதிய CPC/CS/2/3/C/4/02 மத்திய மாகாண பிரதான செயலாளரின் கடிதத்தின் அடிப்படையில் | இது தொடர்பில் மத்திய மாகாண ஆணையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்டு இருந்த போதிலும் 2018 ஜூலை 8 ஆம் திகதி முதல் ஓட்டுனர் சேவையில் ஈடுபடுத்தி சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

3.4 **சொத்துக்கள் முகாமைத்துவம்**

3.4.1 **சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தாமை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) 5 ஏக்கர் 2 ரூட் 16 பர்சஸ் உடைய Suduganga Estate எனும் இடத்தில் எல்லைகளை இட்டு பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | இடத்தின் எல்லைகளை இட்டு பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுதுகங்க வத்த எனும் நிலத்தின் நில அளவை திட்டம் மற்றும் கொடை உறுதியானது நகர சபைக்கு உரித்தாவதுடன் நிலத்தின் பௌதீக எல்லைகளை அடையாளமிடாத காரணத்தினால் உரிமம் அளிக்கப்பட்ட நில அளவையாளர்களிடம் இருந்து விலைகளைக் கோறி பௌதீக எல்லைகளை அடையாளமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) நகர சபையினால் வெவ்வேறு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட வேறு 19 நிலங்களுக்கு நில அளவை திட்டம் தயாரிக்கப்பட்டு அந்த நிலங்களிற்கான உரித்து சான்றிதழ் மற்றும் உரித்து மாற்றக் கட்டளைகள் இருக்கவில்லை. | நிலங்களிற்கான உரித்து மாற்றக் கட்டளைகளைப் பெற்று முன்வைக்க வேண்டும். | உறுதிகள் இல்லாத நிலங்கள் தொடர்பில் பதிவாளரினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு முடியாத நிலங்களுக்கு பிரகடன உறுதிகளை தயாரிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) சபைக்கு சொந்தமான ரூபா 2,600,000 பெறுமதியான 2 நிலங்கள் அங்கீகாரமின்றி கட்டப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக நிலம் மற்றும் கட்டிட கணக்கெடுப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது, ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | இது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை தெளிவு படுத்த வேண்டும். | இந்த இரண்டு இடங்களும் சொத்து கணக்கெடுப்பு சபையினால் அடையாளம் காணப்பட்டு, இரு நிலங்களையும் கையகப்படுத்தி நகர சபையின் கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

### 3.4.2 விளைவற்ற குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 மார்ச் 21 திகதிய நிலம் மற்றும் கட்டிட ஆய்வு அறிக்கையின் படி சபைக்கு சொந்தமான ரூபா 800,000 பெறுமதியுடைய அலுவிஹார சிறுவர் பூங்கா நிலத்தினை பயனுள்ள செயற்பாடொன்றுக்கு பயன்படுத்தப்படவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுக்கு அமைவாக வினைத்திறனாக பயன்படுத்த வேண்டும். | அலுவிஹார சிறுவர் பூங்கா இடத்திற்கு முன்பாக சிறுவர் பூங்காவாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இரு சந்தர்ப்பங்களில் விலைகள் கோரி அறிவித்தல் பிரசுரிப்பதற்கு ரூபா218,121 செலவளித்ததன் பின்பு அந்த விலைகளை மறுத்ததன் காரணமாக அதற்காக செலவளிக்கப்பட்ட பணம் வீணாகியிருந்தது. | கொள்வனவானது சரியான முறையில் செய்யப்படல் வேண்டும். | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையின்படி, விலைகளானது வாங்குவதற்கு ஏற்றவை அல்ல, எனவே அத்தகைய கொள்முதல் எதுவும் செய்யப்படவில்லை. |

### 3.6 பெறுகை செயற்பாடு

#### 3.6.1 பெறுகை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.3 இன் பிரகாரம் பெறுகை திட்டம் மற்றும் பெறுகை அட்டவணை தயாரிக்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டுதலின் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |

### 3.6.2 வழங்கலும் சேவைகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறைவேற்றப்பட்ட இடைக்கால அரசியலமைப்பின் v ஆம் பகுதியில் 11(ஈ) இன் அடிப்படையில் குறைந்த விலையை விட அதிக விலையில் கொள்வனவு செய்து மொத்தம் ரூபா 149,145 ஆன கொள்வனவிற்கு 02 சந்தர்ப்பங்களில் நிதிக் குழுவின் பரிந்துரை வழங்கப்படவில்லை. | தற்போதுள்ள விதிகள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். | நகர சபையின் வெவ்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை செய்யும் போது ஏற்படுகின்ற நிலைமைகளை கருத்திற் கொண்டு செய்யப்பட வேண்டிய நல்ல மற்றும் சிக்கனமான செயற்பாட்டிற்காக செலவளிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | LED தெரு விளக்குகளை வாங்குவதில், வர்த்தமானி எண் 541/17 இல் வெளியிடப்பட்ட மா நகர சபை துணைநிலை அரசியலமைப்பின் பிரிவு V இன் 3(4)(இ) மற்றும் கொள்முதல் வழிகாட்டுதல்கள் 3: 2 அல்லது 3: 4 க்கு முரணாக முறையற்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து 3 சந்தர்ப்பங்களில் விலைகள் பெறப்பட்டு தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் பொறுப்பு இன்றி 715,000 மதிப்புள்ள LED தெரு விளக்குகள் வாங்கப்பட்டன. | கொள்முதல் வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும். | கௌரவ மேயர் அவர்களின் கோரிக்கைக்கு இணங்க 150w இற்கு ஒரு தடவையிலும் மற்றும் 100w இற்கு இன்னொரு தடவையிலும் விலைகள் கோரப்பட்டுள்ளன. 60 மின்குமிழ்கள் வாங்குவதற்கு பத்திரிகை அறிவித்தல் வழங்கினால் அதற்கு அதிக செலவு ஏற்படும் என்பதால் இக் கொள்வனவிற்கு பதிவுத் தபால் மூலம் கடிதம் அனுப்பி விலைகள் பெறப்பட்டன. |
| (இ) | முன்னர் முன்வைக்கப்பட்டிருந்த விலைகளில் 100w LED குமிழ்கள் மற்றும் 150w LED குமிழ்களுக்கான ஆகக் குறைந்த விலை ரூபா 6,900 மற்றும் ரூபா 6,500 பற்றிய தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரை இன்றி முறையே ரூபா 11,500 மற்றும் ரூபா 12,750 விற்கு விலைகள் முன்வைக்கப்பட்டு இருந்த வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்தமையால் சபை நிதியத்திற்கு ரூபா 309,000 நட்டம் ஏற்பட்டுள்ளது. | கேள்வி சபைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கைகளுடன் இணங்கக் கூடிவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறைந்தபட்ச ஏல விலை விளக்கானது தேவைகளை பூர்த்தி செய்யவில்லை என்றும் அது சபையின் உத்தரவுகளின்படி செயல்பட்டுள்ளது என்றும் ஒப்பந்தக் குழு முடிவு செய்துள்ளதுடன் அவ் விளக்கு கொள்வனவால் எவ்வித நட்டமும் ஏற்படவில்லை. |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக்கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் இரண்டு மாத்திரம் நடத்தப்பட்டன. | காலாண்டிற்கு ஒன்று எனும் அடிப்படையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நடாத்தப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு தொடக்கம் குறிப்பிடப்பட்டவாறு குழுக்களை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 4.2 பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு சபைக்கு முன்வைக்கப் பட்டிருந்த கணக்கிடக்கூடிய பெறுமதி ரூபா 12,531,771 தொகையான 05 கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் அளித்திருக்கவில்லை. | தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1)(உ) படி நடவடிக்கை எடுத்தல். | 2018 திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு சபைக்கு முன்வைக்கப்பட்டிருந்த கணக்காய்வு விசாரணைகளில் அதாவது 2019 மே .31 இல் உள்ளவாறு 5 இற்கு மாத்திரம் பதில் அனுப்ப இருப்பதுடன் மற்றும் இது வரைக்கும் அதற்கான பதில்தயாரிக்கப்படுகின்றன. |